




சேலத்தில் டிசம்பர் 17 அன்று நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணியின் 2–ஆவது மாநில மாநாட்டை வெற்றி பெறச் செய்திட நடைபெற்ற ஈரோடு வடக்கு தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணிச் செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டார். “பெரியார் மண் என்று தமிழ்நாட்டைச் சொல்கிறோம் என்றால் அதற்கு அடித்தளமிட்டது ஈரோட்டு மண். அத்தகைய ஈரோட்டு மண்ணிலிருந்து சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு சாரை சாரையாக வர வேண்டும்” என்று இளைஞர் அணி நிர்வாகிகள் – உறுப்பினர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி, வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ் உள்ளிட்ட முன்னணியினர் மேடையில் உள்ளார்கள்.

## நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# மருத்துவ சேவையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

## ரூ.16.52 கோடியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

**நாமக்கல், நவ. 23 -**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ சேவையை துவக்கி வைத்து, 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (21.11.2023) மருத்துவ சேவையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைப்பதன் அடையாளமாக 5 நபர்களுக்கு புறநோயாளி உள் நுழைவுச் சீட்டினை வழங்கினார். மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தலைமையில், 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் வழங்கினார்கள்.

**அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, நாமக்கல் திட்ட அறிக்கை :**

மருத்துவமனை கட்டடங்கள் ரூபாய் 159.452 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 4,52,488 சதுர அடி பரப்பளவில், 700 படுக்கை வசதிகளுடன் கூடிய தரைத்தளத்துடன் 6 தளங்கள் கொண்ட கட்டடமாக கட்டப்பட்டுள்ளது.

**கட்டடங்களின் முக்கிய அம்சங்கள் மருத்துவமனை கட்டடம் :**

**தரை தளம்:** மருத்துவ உபகரணக்கிடங்கு மருந்து கிடங்கு, டயாலசிஸ், சிஎஸ்எஸ்டி, மத்திய ஆய்வகம், மருத்துவ பதிவேடு துறை, கதிரியக்கவியல் (சிடி & எம்.ஆரஐ), பிஎம்ஆர் புறநோயாளிகள் பிரிவு மற்றும் மாவட்ட தொடக்கநிலை இடையீட்டுசேவைகள் மையம்

**முதல் தளம்:** முடநீக்கியல் சிகிச்சை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை. கண் மருத்துவம் புறநோயாளி கள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் அவசர சிகிச்சை அறுவை அரங்கம்.

**இரண்டாம் தளம்:** குழந்தைகள், தோல் மருத்துவம், மனநலம், காச நோய், நெஞ்சக மருத்துவம், பல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவ புறநோயாளிகள் சிகிச்சை பிரிவுகள், மகப்பேறு அறுவை அரங்கம், இரத்த வங்கி மற்றும் பச்சிளங்குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு.

**மூன்றாம் தளம்:** 132 படுக்கைகள் பொது மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு, 20 படுக்கைகள் நெஞ்சக நோய் உள்நோயாளிகள் பிரிவு, 20 படுக்கை மனநல மருத்துவ உள் நோயாளிகள் பிரிவு, 10 படுக்கைகள் தோல் சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு, அதி தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் தீவிர இருதய சிகிச்சை பிரிவு.

**நான்காம் தளம்:** 24 படுக்கைகள் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை உள் நோயாளிகள் பிரிவு,

105 படுக்கைகள் மகளிர் நல, பேறுகால மற்றும் மகப்பேறு உள்நோயாளிகள் பிரிவு மற்றும் 75 படுக்கைகள் குழந்தைகள் நல சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு

**ஐந்தாம் தளம்:** 120 படுக்கைகள் பொது அறுவை சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு, 75 படுக்கைகள் முடநீக்கியல் மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு மற்றும் 30 படுக்கைகள் கண் மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு.

**ஆறாம் தளம்:** 9 அறுவை அரங்கங்கள், மயக்கவியல் துறை, அறுவை சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவு, பிந்தைய மயக்க மருந்து தீவிர சிகிச்சை பிரிவு, 30 படுக்கைகள் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு உள் நோயாளிகள் பிரிவு மற்றும் 20 படுக்கைகள் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பரிவு,

சமையல் கூடம், நிலைய மருத்துவ அலுவலர் 4 குடியிருப்புகள், ஆண்கள் மற்றும் பெண்கள் பயிற்சி மருத்துவர்களுக்கான குடியிருப்பு, செவிலியா விடுதி, சலவையகம். உயிர் மருத்துவ கழிவுகள் கட்டடம். பன்மடங்கு அறை, கட்டண கழிப்பறை, சவக் கிடங்கு மற்றும் காத்திருப்பு அறை போன்ற மருத்துவமனை சார்ந்த கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளது.

**நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நாள் ஒன்றுக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் பணி (திட்ட மதிப்பீடு ரூபாய் 6.37 கோடி) :**

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 4 பேரூராட்சிகள் மற்றும் 1081 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் முசிறி நீர் உந்து நிலையத்தில் இருந்து 12.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முசிறி நீர் உந்து நிலையத்தில் அமைந்துள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் இருந்து புதிய குழாய் 200mm விட்டம் கொண்ட DI K7 குழாய்கள் 12.5 கி.மீ. நீளம் மற்றும் 1167 LPM X 80 M Head திறன் கொண்ட மின் மோட்டார்கள் 2 எண்ணிக்கை பொருத்தி குடிநீர் வழங்குவதற்கு ரூ.6.37 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து முசிறியில் அமைந்துள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் இருந்து 12.5 கி.மீ நீளத்திற்கு 200 மி.மீ விட்டம் கொண்ட DI K7 குழாய்கள் பதிக்கப்பட்டு, முசிறி நீர் உந்து நிலையத்தில் 1167 LPM X 80 M Head திறன் கொண்ட மின்மோட்டார்கள் 2 எண்ணிக்கை பொருத்தப்பட்டு நாள் தோறும் நாமக்கல் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் 05.11.2023 அன்று பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நிறைவு பெற்று திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விபரம் :**

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.16.51 கோடி மதிப்பில் 186 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 2450 உறுப்பினர்களுக்கு வங்கி பெருங்கடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,07,000/ இலட்சம் மதிப்பில் பேட்டரியில் இயங்கும் சக்கர நாற்காலி, 2 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பற்று அட்டைகள், 2 திருநங்கைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வாழ்த்து மடல், சுகாதார துறையின் சார்பில் ரூ.4,000/ மதிப்பில் 2 கர்ப்பணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகம், 2 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டைகள், நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி கல்லூரி விளையாட்டு விழா 2023 போட்டியில் வெற்றி பெற்ற 1 நபருக்கு கோப்பை, ஏழை மாணவ, மாணவிகளுக்கு உதவும் “விருட்சம்” அமைப்பின் மூலம் 3 மாணவ, மாணவிகளுக்கு ரூ.18,400/ மதிப்பில் உதவித் தொகை என மொத்தம் 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தொடர்ந்து, கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி.யின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.92.30 இலட்சம் மதிப்பில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு உபகரணங்கள் பெறுவதற்காக காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம். மதுரா செந்தில், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ரெ.சுமன், நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் கே.சாந்தா அருள்மொழி, நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி மா.பிரியா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.